JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**MC. 3/2019**

**Petitioner present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of 08.04.2026.

**R.W. 1 Name:** கோபி **S/o.** செங்கோட்டையன்

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கும், மனுதாரருக்கும் 01.06.2012 ம் தேதி அன்று இந்து மத வழக்கப்படியும், ஜாதி வழக்கப்படியும் சென்னிமலை, அம்மாபாளையம் அம்மன் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மனுதாரரின் அப்பா திருமணத்தின் போது 25 பவுன் நகை போட்டார் என்றால் சரியல்ல. ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. ரூ.1,50,000 மதிப்புள்ள ராயல் என் பீல்டு இருசக்கர வாகனத்தை வாங்கிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனக்கு இருசக்கர வாகனம் எதுவும் வாங்கி கொடுக்கவில்லை.

2. திருமணத்திற்கு பின்னிட்டு நானும், மனுதாரரும் சென்னிமலை அம்மன் கோவில் புதூரில் வசித்தோம் என்றால் கூட்டு குடும்பமாக வசித்தோம். 14.10.2013 ம் தேதி திருமணத்தின் பயனாக ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். 2 ம் மனுதாரரை பெண் குழந்தையை 1 ம் மனுதாரர் தான் படிக்க வைத்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும், மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தான் 2014 ம் வருடம் பிரிந்து சென்றார் என்றால் சரிதான். 2014 ம் ஆண்டு மனுதாரர் கருத்து வேறுபாடால் பிரிந்து சென்ற சங்கதியை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

3. என்ன கருத்து வேறுபாட்டினால் 1 ம் மனுதாரர் பிரிந்து சென்றார் என்றால் என்னை வேறு ஒரு பெண்ணுடன் தொடர்புபடுத்தி பேசி கருத்து வேறுபாட்டால் பிரிந்து சென்றார். எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. நான் மது அருந்தி விட்டு வந்த 1 ம் மனுதாரரை அடித்து துன்புறுத்துவது வழக்கம் என்றால் சரியல்ல. என்னுடைய அடி, உதைக்கு பயந்து 1 ம் மனுதாரர் சென்னிமலை காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தாரா என்றால் அடி உதைக்காக புகார் கொடுக்கவில்லை ஆனால் என் மீது புகார் கொடுத்திருந்தார். 1 ம் மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் சென்னிமலை காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆனேன் என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை